# மணப்பாறை நகராட்சி

**2021- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் (05.08.2021) 05 - ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 05.08.2021 | **பொருள் - 1**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5437/ஜே2/2021-26 நாள்.10.06.2021-ன்படி, கொரோனா தடுப்பு பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகாகவும், கொரோனா மரணங்கள் அதிகரித்து வரும் சூழலில் நகராட்சி எரிவாயு மயானங்கள் நல்ல நிலைமையில் இயக்கவும், பழுதுகள் ஏற்பட்டால் உடன் சரிசெய்யவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.G6/8232/2020 நாள்.16.06.2021-ல் சென்னையை சேர்ந்த மோ¡ஷா துவாரா டிரஸ்ட் நிறுவனம் கொரோனாவால் இறந்த ஏழை மக்களுக்கு அடக்கம் செய்ய செலவிடப்பட்ட செலவினத் தொகை வழங்க சம்மதமிருப்பதாக கூறி அதன் அதன் சேவையினை பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். மணப்பாறை அரிமா சங்க அறக்கட்டளை நிர்வாகியும், மணப்பாறை நகராட்சி எரிவாயு தகன மேடை பூங்கா பராமரிப்பு அறக்கட்டளை நிர்வாகியுமான திரு.NGR ஸ்ரீதரன் என்பவரது கடிதத்தில் நகராட்சி எரிவாயு மயானத்தில் நீண்ட காலமாக பழுதுகள் பார்க்கப்படாமல் இருப்பதால் கீழ்க்கண்ட விபரப்படி பழுதுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.<br>1. பிரேதம் வைக்கும் பாக்ஸ் உடைந்துள்ளது<br>2. கதவு பகுதி வளைந்துள்ளது.<br>3. ஏழு எண்ணம் பர்னஸ்ஸில் 3 எண்ணம் மட்டும் வேலை செய்கிறது.<br>4. ரெகுலேட்டர், நான் ரிட்டன் வால்வு, தேங் ஓஸ், பழுது ஏற்பட்டுள்ளது.<br>5. புளோயர் சாப்ட் பழுதடைந்துள்ளது.<br>6. புகைப்போக்கி பழுதடைந்துள்ளது.<br>7. லேத் வெல்டிங், டிக்கரிங், பெயின்டிங் வேலை உட்பட<br>மேற்காணும் பழுதுகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர், திருச்சி அவர்களின் அறிவுரையின்படி, | **தீர்மான எண்.971**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

சென்னை மோ¡ஷா துவாரா டிரஸ்ட் நிறுவனம்  இந்நகராட்சி  பகுதி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் கொரோனா தொடர்பான நோயினால் இறந்து நகராட்சி எரிவாயு மயானத்தில் அடக்கம் செய்யப்பட்ட 68 எண்ணிக்கையிலான பிரேதத்திற்கு அடக்கம் செய்ய உண்டான தொகை ரூ.2,38,000/- வழங்கியுள்ளார்.

மேலும் மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட நபரின் குடும்பத்தினர் நகரை சுற்றிய பல பகுதிகளில் இருப்பதால், சம்மந்தப்பட்டவர்களுக்கு வழங்க இயலாத சூழ்நிலை உள்ளதாலும் மேற்காணும் தொகையினை மணப்பாறை நகராட்சி எரிவாயு மயானத்தின் புனரமைக்கும் பணிகளுக்கு செலவிட சம்மதம் தெரிவித்தும் கடிதம் வழங்கியுள்ளார்.

மேலும், நகராட்சி எரிவாயு மயானத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை முழுமையாக சரி செய்ய மதிப்பீடு தயார் செய்ய தகுதி வாய்ந்த நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | சந்தோஷ் சேரிடபிள் டிரஸ்ட், கும்பகோணம் | 5,25,000/- |
| 2 | ஜெயசூர்யா ஏஜென்ஸி 6/2, சன்னதி தெரு, விராலிமலை | 6,05,000/- |
| 3 | பிரியம் டெக்னாலஜீஸ், கிரீன் கார்டன் 1வது கிராஸ், விரிச்சிகுடி, காரைக்கால் | 5,55,000/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியான ரூ.5,25,000/- கொடுத்துள்ள சந்தோஷ் சேரிடபிள் டிரஸ்ட், கும்பகோணம் நிறுவன விலைப்புள்ளியினை ஒப்பந்த மதிப்பீட்டு தொகையாக நிர்ணயம் செய்து ஒப்பந்த நடிவடிக்கை மேற்கொள்ளவும், மேற்கண்ட மதிப்பீட்டு தொகையில் மோ¡ஷா துவாரா மூலம் வழங்கப்பட்டுள்ள தொகையை பயன்படுத்தவும் கூடுதலாக உள்ள மதிப்பீட்டுத் தொகையை நகராட்சியினுடைய பொது நிதியினை பயன்படுத்திக்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இந்நகராட்சி எரிவாயு மயானத்தை புனரமைக்க தேவையான ரூ.5,25,000/-ல் மோ¡ஷா துவாரா நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட தொகை ரூ.2,38,000/- போக மீதி தொகை ரூ.2,87,000/-ஐ நகராட்சியினுடைய வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

05.08.2021

**பொருள் - 2**

மணப்பாறை நகராட்சியில் அம்மா உணவகம் தற்போது செயல்பட்டு வருகிறது. மேற்படி அம்மா உணவகத்தில் நாள் ஒன்று ரூ.249/- என்ற தினக்கூலி அடிப்படையில் சுய உதவிக்குழு (12) பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையில் அம்மா உணவகங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கான தினக்கூலியினை நாள் ஒன்றுக்கு ரூ.325/- ஆக உயர்வு செய்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழ கல் துறை, அரசாணை (4D)எண்-2 நாள் 26.02.2021ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

அரசாணையில் சொல்லப்பட்டுள்ள தினகூலியை வழங்க ஆகும் கூடுதல் செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும். என்றும், ஊதியம் செலவினம் நகராட்சியின் மொத்த வருவாயில் 49 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையினை பார்வையிட்டு பதிவு செய்வதற்கும் அரசாணையின் நிபந்தனைகளின்படி ஊதிய செலவினம் 49%க்குள் உள்ளதால் நகராட்சியில் செயல்பட்டுவரும் அம்மா உணவகங்ளில் பணிபுரிந்துவரும் சுயஉதவிக்குழு பணியாளர்களுக்கு தின கூலியாக ரூ.249/-லிருந்து ரூ.325/-ஆக உயர்த்தி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அரசாணையினை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தினகூலி உயர்வு செய்வதால் ஆகும் கூடுதல் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.972**
**அனுமதிக்கப்பட்டது.**

05.08.2021

**பொருள் - 3**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் 29.06.2021-ம் தேதிய மணப்பாறை நகராட்சி ஆய்வின் போது வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி, மணப்பாறை நகராட்சி அலுவலக வளாகத்தில் இருப்பில் உள்ள பழுதுபோன பயன்படுத்த லாயக்கற்ற பொருட்களை ஏலம் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கியதன் பேரில் கீழ்க்கண்ட விபரப்படியான பழைய பழுதடைந்த பொருட்களின் விபரம் தரப்படுகிறது.

| வ.எண். | பழைய பழுதடைந்தவைகள் விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | 4வீல் தள்ளுவண்டிகள் | 26 |
| 2 | ரி¡ஷா வண்டிகள் | 14 |
| 3 | 2 வீல் தள்ளுவண்டிகள் | 8 |

**தீர்மான எண்.973**
**அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| 4 | உடைந்த குப்பை பெட்டிகள் (Dumper Placer Pins) | 56 |
| 5 | பச்சைநிற பிளாஸ்டிக் குப்பை கூடை பெரியது | 20 |
| 6 | சிவப்பு நிற பிளாஸ்டிக் குப்பைக்கூடை சிறியது | 6 |
| 7 | பச்சை நிற கைப்பிடியுடன் சக்கரம் பொருத்திய குப்பைக்கூடை | 23 |
| 8 | பச்சை நிற சிறிய குப்பைக்கூடை | 10 |
| 9 | வீல் சேர் | 3 |
| 10 | வயர் சேர் | 32 |
| 11 | சோபா சேர் | 16 |
| 12 | அடிபம்ப் | 2 |
| 13 | டூவீலர் பைக் | 4 |
| 14 | இரும்பு ஸ்டாண்ட் | 1 |
| 15 | சின்டெக்ஸ் 3000 லி | 1 |
| 16 | சின்டெக்ஸ் 5000 லி | 1 |
| 17 | சின்டெக்ஸ் 1000 லி | 10 |
| 18 | பழைய டயர்கள் | 61 |

மேற்காணும் பழைய பழுதடைந்த பொருட்களை நகராட்சி அலுவலகத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதால், டெங்கு போன்ற நோய்கள் உற்பத்திக்கு ஏதுவாக உள்ளதாலும், பொது சுகாதார அவசியம் கருதி மேற்காணும் பழைய பொருட்களை துறை விலையாக நிர்ணயம் செய்துள்ள தொகைக்கு குறையாது ஏலத்தில் வைத்து கழிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அனுமதிக்கலாம்

(3150/2019/எச்2)

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**